*Available online at:* http://www.advancedscientificjournal.com
http://www.krishmapublication.com
*IJMASRI, Vol. 2, issue 1, pp. 276- 279, Oct. -2023*
https://doi.org/10.53633/ijmasri

**INTERNATIONAL JOURNAL OF MULTIDISCIPLINARY ADVANCED SCIENTIFIC RESEARCH AND INNOVATION (IJMASRI)**

**ISSN: 2582-9130** **IBI IMPACT FACTOR 1.5** **DOI: 10.53633/IJMASRI**

**RESEARCH ARTICLE**

# முற்காலச்சோழர் கோயில் வரலாறும் வளர்ச்சியும்

**முனைவர் ஜெ. சசிகலா**
*உதவிப்பேராசிரியர், வரலாற்றுத்துறை, C. கந்தசாமி நாயுடு மகளிர் கல்லூரி, கடலூர்*

**ஆய்வு சுருக்கம்**

கோயில்களின் தோற்றம், வளர்ச்சி, கட்டடக்கலை, சிற்பக்கலை போன்றவற்றைப் பற்றி அறிந்துகொள்வதற்கு அக்கோயில்களின் வரலாறு பெரிதும் துணைபுரிகிறது. இவ்வகையில் முற்காலச்சோழர் கோயிலின் தோற்றம், கட்டடக்கலை, சிற்பக்கலை முதலியவற்றைப் பற்றி அறிந்துகொள்வதற்கு அதன் வரலாற்றையும் வளர்ச்சியையும் தெரிந்துகொள்ள வேண்டியது அவசியமாகிறது. இவ்வியல் முற்காலச்சோழர் கோயிலின் வரலாற்றையும் அது பல்வேறு காலகட்டங்களில் அடைந்த வளர்ச்சியையும் இலக்கியங்கள் மற்றும் கல்வெட்டுகளின் வாயிலாக விளக்குகிறது

## கோயில் வரலாறு இலக்கியச் சான்றுகள்

பல்லவ மன்னன் முதலாம் மகேந்திரவர்மனின் (கி.பி. 610-630) சமகாலத்தவரான சைவ சமைய நாயன்மார் திருஞானசம்பந்தர் பாடிய பாடல்கள் தேவாரத்தில் முதல் மூன்று திருமுறைகளாகத் தொகுக்கப்பட்டுள்ளன. இவற்றில் மூன்றாம் திருமுறையில் கிளியன்னவூர் என்ற பதிகத்தில் (பதிக எண்.முந்நூற்று எண்பத்தைந்து) திருஞானசம்பந்தர் கிளியன்னவூர் என்ற பெயரில் கிளியனூரின் சிறப்பையும், முற்காலச் சோழர் கோயில் வரலாறும் கலையும் கிளியனூரில் உள்ள இறைவனின் பெருமைகளையும் வெகுவாகப் புகழ்ந்து பாடியுள்ளார்.[1]

திருஞானசம்பந்தர், தாம்பாடிய தேவாரத் திருப்பதிகத்தில் கிளியன்னவூரின் சிறப்பைப் பற்றிக் கூறும் போது, அது ஏர் சிறக்கும் ஊரென்றும், பசுமையான வயல்களையுடைய, அதிக மக்கள் வாழ்கின்ற ஊரென்றும் புகழ்ந்து பாடுகிறார். சம்பந்தர் கிளியன்னவூரில் வாழ்கின்ற சிவபெருமானுடைய திருவடிகளை வழிபடும் அடியவர்கள் தீங்குகளிலிருந்து விடுபட்டுப் புகழுடன் வாழ்வார்கள் என்றும், மிகக்கடினமான வறுமை, இயல்பற்றவர்களின் தொடர்பு. மகளிரால் ஏற்படும் பூசல் இவற்றிலிருந்து விடுபடுவார்கள் என்றும். இவ்விறைவன் இன்பத்தைத் தேக்குபவன். அன்பர்களுக்கு வேண்டுவதை அளிப்பவன், துன்பம் தீர்த்து சுகம் அளிப்பவன், நமசிவாய என்னும் ஐந்து எழுத்து மந்திரத்தை உச்சரிப்பவர்களைத் தேவர் ஆக்குபவன், இராவணனுக்கு அருள் பாலித்தவன், பாண்டிய மன்னனின் சூலநோய் நீக்கியவன், சமண சமயத்தைத் தாழ்த்தியவன் என்றும் குறிப்பிடுகின்றார்.[2]

திருஞானசம்பந்தரால் இத்தலமும், இத்தலத்தின் இறைவனும் குறிப்பிடப்பட்டுள்ளதால் கி.பி.ஏழாம் நூற்றாண்டில் செங்கற்களால் கட்டப்பட்ட எளிய வடிவக் கோயில் கிளியனூரில் இருந்திருக்கலாம் எனவும், அது பின்னர் முற்காலச் சோழர்கள் காலத்தில் கற்றளியாக மாற்றப்பட்டிருக்கலாம் எனவும் நம்மால் அறிய முடிகிறது.

## கல்வெட்டுச் சான்றுகள்

*கிளியனூர் முற்காலச்சோழர் கோயிலில் மொத்தம் ஒன்பது கல்வெட்டுகள் காணப்படுகின்றன.[3] இவற்றில் சோழர் காலத்தைச் சார்ந்த கல்வெட்டுகள் எட்டும், விசயநகர காலத்தைச் சார்ந்த கல்வெட்டு ஒன்றும் உள்ளது. இக்கல்வெட்டுகள் கோயிலின் கிழக்கு, மேற்கு மற்றும் வடக்குச் சுவரிலும், மகா மண்டபத்தின் கிழக்கு, மேற்கு மற்றும் வடக்குச் சுவரிலும் பொறிக்கப்பட்டுள்ளன.*

*சோழ மன்னர்களான முதலாம் பராந்தகன், முதலாம் இராசேந்திரன். முதலாம் இராசாதிராசன், முதலாம் குலோத்துங்கன், முதலாம் விக்கிரமசோழன் போன்றவர்களின் கல்வெட்டுகள், அவர்கள் காலத்தில் முற்காலச்சோழர் கோயிலின் வளர்ச்சிக்கும், வழிபாட்டிற்கும் வழங்கப்பட்ட பல்வேறு வகையான தானங்களைப் பற்றித் தெரிவிக்கின்றன.*

*முதலாம் பராந்தகசோழனின் (கி.பி.907-953) பத்தாவது ஆட்சியாண்டில் (கி.பி.917) வெட்டப்பட்ட கல்வெட்டு ஒன்று இக்கோயிலின் கருவறைக் கிழக்குச் சுவரில் காணப்படுகிறது.[4] இக்கல்வெட்டு ஓய்மா நாட்டைச் சேர்ந்த பிரம்மதேயமான கிளிநல்லூரிலுள்ள ஆளும் கணத்தின் உறுப்பினர்களில் ஒருவரான பாரசாரன்தியான் சாத்தன் என்பவன் அம்மாவாசை மற்றும் சங்கராந்தி நாள்களில் இக்கோயிலிலுள்ள இறைவன் திருவக்னீஸ்வர முடையாரின் வழிபாட்டிற்காக நிவந்தங்கள் வழங்கிய செய்தியைக் குறிப்பிடுகிறது.*

*முதலாம் இராசேந்திரசோழனின் (1012-1044) பதின்மூன்றாவது ஆட்சியாண்டைச் (கி.பி. 1025) சேர்ந்த கல்வெட்டு ஒன்று இக்கோயிலின் தெற்கு, கிழக்கு மற்றும் வடக்குச் சுவரில் இடம்பெற்றுள்ளது.[5] இக்கல்வெட்டின் மூலம் ஜெயங்கொண்ட சோழமண்டலத்தின் ஒரு உட்பிரிவான ஓய்மா நாட்டில் கிளிநல்லூர் என்னும் கேரளாந்தக சதுர்வேதிமங்கலம் பிராமணர்கள் வாழ்ந்த பிரம்மதேயமாக இருந்து வந்தது என்பதை அறியமுடிகிறது.*

*முதலாம் இராஜேந்திர சோழனின் (கி.பி.1012-1044) மூன்றாவது ஆட்சியாண்டில் (கி.பி.1015) வெளியிடப்பட்ட கல்வெட்டு ஒன்று இக்கோயிலின் கிழக்குச் சுவரில் அமைந்துள்ளது.[6] இக்கல்வெட்டில் பிராமணப்பெண் ஒருத்தி திருவக்னீஸ்வரமுடையார் கோயிலில் விளக்கெரிப்பதற்காக தொண்ணூறு ஆடுகளைத் தானமாக வழங்கினாள் என்ற செய்தி காணப்படுகிறது.*

*சோழமன்னன் முதலாம் இராசாதிராசனின் (கி.பி.1018 1054) இருபத்தியெட்டாவது ஆட்சியாண்டில் (கி.பி.1046) பொறிக்கப்பட்ட கல்வெட்டு ஒன்று இக்கோயிலின் முன்புற மண்டபத்தில் காணப்படுகிறது.[7] இக்கல்வெட்டு "திங்களேர்தரு" என்னும் இராசாதிராசனின் மெய்க்கீர்த்தியுடன் தொடங்குகிறது. இக்கல்வெட்டு மறவடிகள் என்றழைக்கப்பட்ட உணவுச்சத்திரத்தின் பராமரிப்புக்காகக் கிளிநல்லூர் சபையோர் கிளிநல்லூர் திருவக்னீஸ்வரமுடைய மகாதேவர் கோயிலுக்கு நிலங்களை விற்ற செய்தியை குறிப்பிடுகிறது.*

*சோழமன்னன் முதலாம் இராசாதிராசனின் (கி.பி.1018 1054) இருபத்தொன்பதாவது ஆட்சியாண்டில் (கி.பி.1047) வெட்டப்பட்ட மற்றொரு கல்வெட்டு இக்கோயில் மண்டபத்தின் வடக்கு மற்றும் மேற்குச் சுவரில் காணப்படுகிறது.[8] இக்கல்வெட்டிலும் மறவடிகள் எனப்படும் உணவுச்சத்திரத்தின் பராமரிப்புக்காகக் கிளிநல்லூர் சபையோர் கிளிநல்லூர் திருவக்கினீஸ்வரமுடைய மகாதேவர் கோயிலுக்கு மற்றொரு முறை நிலத்தை விற்பனை செய்த செய்தி காணப்படுகிறது.*

*முதலாம் குலோத்துங்க சோழனின் (கி.பி.1070-1122) மூன்றாவது ஆட்சியாண்டைச் சார்ந்த (கி.பி.1073) கல்வெட்டொன்று இக்கோயில் மகாமண்டபத்தின் கிழக்குச் சுவரில் இடம் பெறுகிறது.[9] இக்கல்வெட்டு ஓய்மாநாடு எனப்படும் விசயராசேந்திர வளநாட்டிலுள்ள கிளிநல்லூர் என்னும் உலகுய்ய வந்த சோழ சதுர்வேதிமங்கலத்து திருவக்னீஸ்வரம் கோயிலிலுள்ள பிச்சாடனர் கருவூலத்திலிருந்து சில நிலங்களுக்குக் கடன் வழங்கப் பட்டதையும், கடன் தொகைக்கு வட்டி பெறுவதால் இவ்வூர் சபையோர் கடன் அளிக்கப்பட்ட நிலங்களுக்கு வரிவிலக்கு அளித்ததையும் குறிப்பிடுகிறது.*

*முதலாம் விக்கிரமசோழனின் (கி.பி.1118-1135) பத்தாவது ஆட்சியாண்டில் (கி.பி.1128)வெட்டப்பட்ட கல்வெட்டொன்று இக்கோயில் கருவறையின் வடக்குச் சுவரில் பொறிக்கப்பட்டுள்ளது.[10] இக்கல்வெட்டு "பூமாதுபுணர" என்னும் விக்கிரம சோழனின் மெய்க்கீர்த்தியுடன் தொடங்குகிறது. ஜெயங்கொண்ட சோழ மண்டலத்தின் உட்பிரிவான ஓய்மாநாடு என்னும் விசயராசேந்திர வளநாட்டிலுள்ள கிளிநல்லூர் என்ற உலகுய்யவந்த சதுர்வேதிமங்கலத்தின் சபையினர் இவ்வூர் திருவக்னீஸ்வரமுடைய மகாதேவர் கோயிலில் நடைபெறும் வழிபாட்டிற்காக நிலங்களைக் கோயிலுக்குத் தானமாக வழங்கிய செய்தியை இக்கல்வெட்டுத் தெரிவிக்கிறது.*

*மன்னனின் பெயர் மற்றும் ஆட்சியாண்டு குறிப்பிடப்படாத சோழர் காலத்தைச் சார்ந்த கல்வெட்டு ஒன்று இக்கோயிலின் தெற்குச் சுவரில் பொறிக்கப்பட்டுள்ளது.[11] இக்கல்வெட்டு சபையோர் திருவக்னீஸ்வர முடைய தேவர் கோயில் ஸ்ரீபலி வழிபாட்டிற்காக கங்கனு சாயிராவிலுள்ள குவளாலம் என்னுமிடத்தைச் சேர்ந்த கங்கன் அம்பலவன் கண்டராதித்தன் என்பவனுக்கு நிலங்களை விற்ற செய்தியைக் குறிப்பிடுகிறது.*

சக ஆண்டு 1372இல் (கி.பி.1450) வெளியிடப்பட்ட விசயநகர மன்னன் மல்லிகார்ச்சுனனின் (கி.பி.1447-1465) கல்வெட்டொன்று இக்கோயில் மடப்பள்ளியின் (தற்சமயம் மடப்பள்ளி இல்லை ) மேல்தளத்தில் காணப்படுகிறது.[12] இக்கல்வெட்டு விருப்பராய கங்கேயனின் மகன் விஜயராம கங்கேயன் கிளிவளவநல்லூரில் மதகு ஒன்றை ஏற்படுத்தியதையும், கடும்புயலில் உடைந்த இவ்வூர்க் குளங்கள் மூன்றைச் சீரமைத்ததையும் தெரிவிக்கிறது.

### II. கோயில் வளர்ச்சி

கி.பி.ஏழாம் நூற்றாண்டில் கிளியனூர் முற்காலச்சோழர் கோயில் செங்கற்களால் கட்டப்பட்ட எளிமையான கோயிலாக இருந்திருக்கலாம் எனத் திருஞான சம்பந்தர் பாடிய தேவாரப் பதிகங்களின் வாயிலாக அறியமுடிகிறது. பின்னர் இக்கோயில் முற்காலச்சோழர் காலத்தில் கற்றளியாக எழுப்பப்பட்டது. இடைக்காலச் சோழர்கள் காலத்திலும், கி.பி. 18ஆம் நூற்றாண்டிலும், பின்னர்த் தற்காலத்திலும் இக்கோயில் விரிவுப்படுத்தப்பட்டு வளர்ச்சியடைந்து இன்றைய நிலையைப் பெற்றுள்ளது.

### முற்காலச் சோழர்காலம்

முற்காலச்சோழர் கோயிலில் காணப்படுகின்ற கல்வெட்டுகளில் மிகவும் பழைமையானது முதலாம் பராந்தக சோழனின் (கி.பி. 907 - 953) பத்தாவது ஆட்சியாண்டில் (கி.பி.917) வெளியிடப்பட்ட கல்வெட்டாகும். இது கோயில் கருவறையின் கிழக்குச் சுவரில் வெட்டப்பட்டுள்ளது. பராந்தக சோழனின் இக்கல்வெட்டும்,[13] கருவறை மற்றும் அர்த்தமண்டபத்தின் கட்டடக்கலைத் தன்மைகளும், அவற்றிலுள்ள கற்சிற்பங்களின் கலைக்கூறுகளும், இக்கோயிலின் கருவறையும், அர்த்த மண்டபமும், பராந்தக சோழனின் காலத்தில் எழுப்பப்பட்டவை என்பதை மிகத் தெளிவாக உணர்த்துகின்றன.

### இடைக்காலச் சோழர்காலம்

இடைக்காலச் சோழ மன்னனான முதலாம் இராசாதிராசனின் (கி.பி.1018-1054) இருபத்தெட்டாவது ஆட்சியாண்டில் (கி.பி.1046) பொறிக்கப்பட்ட கல்வெட்டொன்று,[14] முற்காலச்சோழர் கோயில் மகா மண்டபத்தின் மேற்குச் சுவரில் காணப்படுகிறது. இக்கல்வெட்டின் அமைவிடம், மகாமண்டபம் மற்றும் அலங்கார மண்டபங்களின் கட்டடக்கலை இயல்புகள் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு இவ்விரு மண்டபங்களும் இடைக்காலச் சோழ மன்னன் இராசாதிராசன் காலத்தில் கட்டப்பட்டன எனக் கொள்ளலாம். இம்மண்டபங்களின் கட்டடக்கலைத் தன்மைகள் கருவறை மற்றும் அர்த்தமண்டபத்தின் கட்டடக்கலை இயல்புகளிலிருந்து வேறுபட்டவையாக உள்ளன.

### 18ஆம் நூற்றாண்டு

கி.பி. 18ஆம் நூற்றாண்டில் முற்காலச்சோழர் கோயில் அதிக அளவில் வளர்ச்சியடைந்துள்ளது. இக்கோயிலின் மேற்குப் பிரகாரத்தில் அமைந்துள்ள ஸ்ரீஅகிலாண்டேஸ்வரி அம்மன் சன்னதி, நந்தி மண்டபம் மற்றும் முருகன் சன்னதியும், வடக்குப் பிரகாரத்திலுள்ள சண்டிகேஸ்வர் சன்னதி, பைரவர் சன்னதி மற்றும் நவகிரகங்கள் சன்னதியும் இக்கால கட்டத்தில் கட்டப்பட்டவையாகத் தெரிகின்றன. மேற்கூறிய அம்மன் மற்றும் பரிவார ஆலயங்களின் கட்டடக்கலைத் தன்மைகளும் அவற்றிலுள்ள கற்சிற்பங்களின் வடிவமைப்பும் கி.பி.18ஆம் நூற்றாண்டைச் சார்ந்த கலைப்பாணியைப் பிரதிபலிக்கின்றன.

### தற்காலம்

20ஆம் நூற்றாண்டின் சி.பு.திருகாமு ரெட்டியார் என்பவரின் மனைவி சரஸ்வதி அம்மாள் சாதாரண வருடம் ஆவணி மாதம் 29ஆம் தேதி, (1965) முற்காலச்சோழர் கோயிலின் தெற்குப் பிரகாரத்தில் அமைந்துள்ள கல்யாண மண்டபத்தையும், கிழக்குப் பிரகாரத்தில் காணப்படுகின்ற முகமண்டபத்தையும் கட்டியதாக இக்கோயிலின் கல்யாண மண்டபத்தின் மேற்பகுதியில் பொறிக்கப்பட்டுள்ள கல்வெட்டு தெரிவிக்கிறது. மேலும் இக்கோயில் நன்கு புனரமைக்கப்பட்டுக் கும்பாபிஷேகம் 13.4.2005 ஆம் தேதியன்று நடைபெற்றது. தற்சமயம் மகாகணபதி சன்னதி கோயிலின் கிழக்குப் பிரகாரத்தில் புதிதாகக் கட்டப்பட்டுள்ளது.

### அடிக் குறிப்புகள்

1. கு.சுந்தரமூர்த்தி, திருஞானசம்பந்தர் தேவாரம், தருமபுரம், 2000, .935.
2. மேலது, ப.936.
3. A.R. E., No. 146 - 145 of 1919.
4. T.V.Mahalingam, A. Topographical List of Inscriptions in Tamil Nadu and Kerala States, New Delhi, 1988 p.212.
   S.R.Balasubrahmanyam, Early Chola Art, Part I, Bompay, 1966, p. 197.
5. A.R.E., No. 149 of 1919.
6. Ibid., No.147 of 1919.
7. Ibid,, No.152 of 1919.
8. Ibid., No.151 of 1919.
9. Ibid., No.153 of 1919.
10. Ibid., No.150 of 1919.

11. *Ibid., No. 146 of 1919.*
12. *Ibid., No.154 of 1919.*
13. *T.V.Mahalingam, Op.cit., p.212; S.R.Balasubrahmanyam, Op.cit.,p.197.*
14. *A.R.E., No.152 of 1919.*

*********